**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை – மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டம் – 2017–2018ஆம் நிதியாண்டிற்கான திட்டத் தொடராணை மற்றும் ரூ.8,20,10,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 18** **நாள்: 14.06.2018**
**விளம்பி – வைகாசி, 31**
**திருவள்ளுவர் ஆண்டு, 2049**
**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண் 31, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–1)த் துறை, நாள் 19.10.2016.
2. அரசாணை (நிலை) எண் 7, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–1)த் துறை, நாள் 27.03.2017.
3. அரசாணை (நிலை) எண் 9, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–1)த் துறை, நாள் 31.03.2017.
4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 1867/சிப–3/2017, நாள் 22.08.2017.
5. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 1867/சிப–3/2017, நாள் 13.11.2017 மற்றும் 01.02.2018.

----------

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டத்தினை 2015–2016ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டத் தொடராணையும் 225 சிறப்புப் பள்ளிகளில் உள்ள 653 சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.10,000/– என்ற வீதத்தில் 12 மாதங்களுக்கு ஊதிய மானியம் வழங்க ரூ.7,80,46,000/– (ரூபாய் ஏழு கோடியே எண்பது இலட்சத்து நாற்பத்து ஆறாயிரம் மட்டும்) 2016–2017ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் இச்செலவினத்தினை மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ், 2016–2017ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டத் தொடராணையும் 230 சிறப்புப் பள்ளிகளில் உள்ள 668 சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.10,000/– என்ற வீதத்தில், 12 மாதங்களுக்கு ஊதிய மானியம் வழங்க ரூ.7,98,35,000/– (ரூபாய் ஏழு கோடியே தொண்ணூற்றெட்டு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[த.பி.பா.]

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டத்தின்படி 2015–2016ஆம் ஆண்டில் விடுபட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் 8 சிறப்புப் பள்ளிகளில் உள்ள 15 சிறப்பாசிரியர்கள் மற்றும் 8 தசைப் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.10,000/– வீதம், 12 மாதங்களுக்கு ஊதிய மானியம் ரூ.26,80,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் மனவளர்ச்சி குன்றியோருக்காக செயல்படும் திட்டங்களுக்கென 2017–2018ஆம் ஆண்டின் வரவு–செலவு திட்டத்தில் 2235–02–101 MG 0914 எனும் கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.16,26,04,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், 2017–2018ஆம் நிதியாண்டிற்கு ரூ.7,98,35,000/– நிதி ஒதுக்கீடு செய்து திட்டத் தொடராணை வழங்கி அனுமதி ஆணை வழங்குமாறு அரசினை கோரியிருந்தார்.

5. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்காணும் திட்டத்தின் கீழ் அனைத்து தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள் அடிப்படையில் 238 நிறுவனங்களில் பணிபுரியும் 685 சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியமாக ரூ.8,20,10,000/– (ரூபாய் எட்டு கோடியே இருபது இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடும் திட்டத் தொடராணையும் வழங்குமாறும் அரசினை கோரியுள்ளார்.

6. மேலே பத்தி–5ல் காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டத்தை, 2017–2018ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டத் தொடராணையும், இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு 238 சிறப்புப் பள்ளிகளில் உள்ள 685 சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.10,000/– வீதம் 12 மாதங்களுக்கு ஊதிய மானியம் வழங்க ரூ.8,20,10,000/– (ரூபாய் எட்டு கோடியே இருபது இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி–6இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> **“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 101–மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள்– MG–மனவளர்சசி குன்றியவர்களுக்கான சிறப்பு நிலையங்களுக்கான புகழ்வாய்ந்த அரசுசாரா அமைப்புகளுக்கு நிதியுதவி – 09– உதவித் தொகை – 01–நடப்புச் செலவுக்கான உதவித் தொகை.**
>
> **(து.தொ.கு.2235 02 101 MG 0914).”**

8. மேலே பத்தி–6ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.8,20,10,000/– 2018–19ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும் 2018–2019ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி–6இல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி–6இல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை 2018–19ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில்

சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (ச.ந. / வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண் 28724/நிதி(சந)/2018, நாள் 13.06.2018–ல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 385 (முன்னூற்று எண்பத்தைந்து) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (ச.ந. (ம) ச.தி.) அவர்களின்
முதுநிலை தனிச் செயலர், சென்னை–9.
அரசுச் செயலரின் முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
நிதித் (ச.ந/வ.செ.பொது–I & II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்